# நீங்கள் காசநோயால் இறக்க முடியுமா?



1. காசநோயைக் குணப்படுத்த மருந்துகள் உள்ளன.
2. ஆனால், காசநோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் தகுந்த சிகிச்சையைப் பெறவில்லை என்றால் அவர் உயிரிழக்க நேரிடலாம்.
3. உலக சுகாதார அமைப்பின் (World Health Organization, WHO) உலகளாவிய காசநோய் அறிக்கையின்படி, 2022 -இல் சுமார் 1.3 மில்லியன் மக்கள் காசநோயால் இறந்துள்ளனர்.



அதிர்ஷ்டவசமாக, சிங்கப்பூரில் காசநோய் தொடர்பான இறப்புகள் குறைவாகும். சிங்கப்பூர் குடியிருப்பாளர்களிடையே காசநோய் இறப்பு விகிதம் 100,000 மக்கள்தொகைக்கு 0.5 என்ற விகிதத்தில் உள்ளது, 2019 -இல் காசநோயால் 19 பேர் இறந்துள்ளனர்.

National Centre for Infectious Diseases

# காசநோயைக் குணப்படுத்த முடியுமா?



1 காசநோயைத் தகுந்த சிகிச்சையால் குணப்படுத்த முடியும்.

2 காசநோய் கிருமித் தொற்று உள்ள ஒருவரின் நெருங்கிய தொடர்பில் இருந்ததாக நீங்கள் அடையாளம் காணப்பட்டால், பரிசோதனைக்காக தேசிய காசநோய் பரிசோதனை மையத்திற்குப் (NTBSC) பரிந்துரைக்கப்படுவீர்கள்.

3 உங்களுக்கு மறைந்துள்ள தொற்று காசநோய் இருப்பதாகப் பரிசோதனை காட்டினால், காசநோய்த் தடுப்பு சிகிச்சை மருத்துவர்களால் வழங்கப்படலாம்.



4 உங்களுக்குச் செயல்நிலை காசநோய் இருப்பதாகப் பரிசோதனை காட்டினால், தேசிய காசநோய் பராமரிப்பு மையத்தில் (NTBCC) சிகிச்சை தொடங்கப்படும். ஆரம்பகால நோயறிதல் மற்றும் சிகிச்சையின்மூலம் கடுமையான சிக்கல்கள் மற்றும் மரணத்தைத் தடுக்கலாம்.

National Centre for Infectious Diseases

# காசநோய்க்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது?



1. காசநோய் சிகிச்சைக்கு வெவ்வேறு மருந்துகளின் கலவையை DOT* -இன் வழி 6-9 மாதங்களுக்கு உட்கொள்ளவேண்டும்.
2. நோயாளிகள் DOT சிகிச்சைக்குத், தேசிய காசநோய் பராமரிப்பு மையத்திற்கு (NTBCC) அல்லது பலதுறை மருந்தகங்களுக்குச் செல்ல வேண்டும்.

#உங்களுக்குத் தெரியுமா?

- >95% **நோயாளிகள்** சரியான சிகிச்சையைப் பின்பற்றும்போது குணமடைகிறார்கள்.
- மருந்துகளைச் சரியாக சாப்பிடாவிட்டால் மருந்து-எதிர்ப்பு வகை காசநோய்க்கு வழிவகுக்கும். இது, நோய்க்குச் சிகிச்சையளிப்பதைக் கடினமாக்குகிறது.
- சிங்கப்பூரர்கள்/சிங்கப்பூர் நிரந்தரவாசிகளுக்குச், சிகிச்சைக்கு **அதிகளவு மானியமளிக்கப்படுகிறது**.

*DOT என்பது நேரடியாக கண்காணிக்கப்படும் சிகிச்சைமுறையாகும். இதில் மருத்துவர், தாதி அல்லது பயிற்சி பெற்ற பணியாளர்களின் கண்காணிப்பின் கீழ் நோயாளிகள் தங்கள் மருந்துகளை எடுத்துக் கொள்கின்றனர்.

National Centre for Infectious Diseases

# மறைந்திருக்கும் காசநோய்க்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது?



1. மறைந்திருக்கும் காசநோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, எதிர்காலத்தில் செயல்நிலை காசநோய் தொற்று ஏற்படும் அபாயத்தைக் குறைக்க, தடுப்பு சிகிச்சை* அளிக்கப்படுகிறது.

2. தடுப்பு சிகிச்சைக்குப், பின்வருனவற்றில் ஏதேனும் ஒரு காசநோய்-எதிர்ப்பு மருந்தை உட்கொள்ளவேண்டும்.
   - 4 மாதங்களுக்கு ரிஃபாம்பிசின், அல்லது
   - 6 மாதங்களுக்கு ஐசோனியாசிட்

**#உங்களுக்குத் தெரியுமா?**

மறைந்திருக்கும் காசநோய்த் தொற்றைக் குணமாக்க சிகிச்சை **இலவசமாக** வழங்கப்படுகிறது.

*இந்த சிகிச்சை எதிர்காலத்தில் நோயாளிக்குக் காசநோய் வராமல் பாதுகாக்கிறது.



National Centre for Infectious Diseases